### தமிழ்நாட்டில், இரண்டு, மூன்று முறை தோற்றும் இப்போதும் பாடம் கற்கவில்லை!

# தி.மு.க. கூட்டணியை அசைத்துக்கூடப் பார்க்க முடியாது!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஜூன் 11 - தமிழ்நாட்டில், இரண்டு, மூன்று முறை தோற்றும் இப்போதும் பாடம் கற்கவில்லை. சில அரசியல் அடமானங்களும், அரசியல் புரோக்கர்கள் வீசும் வலையில் சிக்கும் பேர அரசியல்வாதி களும் புதிய தெம்பாகிவிட முடியாது. தமிழ்நாட்டில் மீண்டும் 'திராவிட மாடல்' ஆட்சி என்பது அசைக்க முடியாத கொள்கைக் கோட்டையாக உள்ளது. இவர்களின் அரசியல் 'சித்து' விளையாட்டுகள், பம்மாத்து பேரங்களுக்கு சில சபல புத்திக் கட்சிகளும், ஏல அரசியல்வாதிகளும் கிடைப்பார்களே தவிர, வெற்றிக் கனியைப் பெறலாம் என்று நினைத்து, தி.மு.க. கூட்டணியை அசைத்துக்கூடப் பார்க்க முடியாது என்று அறிக்கை வெளியிட்டுள்ளார் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள்.

அவரது அறிக்கை வருமாறு:

பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் வகையறாக்களான ஹிந்து முன்னணி, விசுவ ஹிந்து பரிஷத் போன்ற ஆரிய (ஹிந்து) மத வெறி கட்சிகளின் திடீர் 'முருக பக்தி'யைக் கண்டு, ஏமாறுவதற்குப் பெரியார் மண்ணான திராவிட மண் - தமிழ்நாடு ஒருபோதும் இடந்தராது.

சென்ற சில மாதங்களுக்கு முன்பே, இப்போது அரசியல் 'புது இடந்தேடி' யாகியுள்ள அண்ணாமலை போன்றவர்கள் முன்னின்று, அமைதிப் பூங்காவான தமிழ்நாட்டில் மதக்கலவரம் ஏற்படச் செய்யவே, "திருப்பரங்குன்றத் திலுள்ள முருகன் கோவிலுக்கு ஆபத்து, அந்த மலையை இஸ்லாமியர்கள் தங்கள் வயப்படுத்த, தங்களது மத நெறிக்கு ஏற்ப 'சிக்கந்தர் மலை' என்று மாற்றிட முயற்சிக்கிறார்கள், ஹிந்துக்களே ஒன்று சேருங்கள்'' என்று அங்கே கண்டன ஆர்ப்பாட்டக் கலவரம் ஏற்படுத்த முயன்று தோற்றுவிட்டனர்.

**திருப்பரங்குன்றம் மக்களின் ஒற்றுமை!**

அவ்வூரில் உள்ள அனைத்து மக்களும் ஹிந்து, முஸ்லிம் மற்றும் நம்பிக்கையாளர் அல்லாத குடிமக்கள் எல்லோரும் ஒரே குரலில், "நாங்கள் ஒன்றுபட்டு சகோதரர்களாக வாழுகிறோம்; ஏன் வெளியூர் ஆட்களைக் கொணர்ந்து இங்கே கலவரம் உருவாக்க முயற்சிக்கிறீர்கள்'' என்று முகத்தில் அறைந்தார் போல் கேட்டனர்.

அந்தக் கலவர முயற்சிகள் வெறும் 'புஸ்வாணம்' ஆகிவிட்டன.

என்றாலும், மக்களுக்குள்ள கடவுள் பக்தியைப் பயன்படுத்தி, கோவில்களை ஆர்.எஸ்.எஸ். மற்றும் புரோகித வர்க்கம் தங்களது ஆதிக்கப் பீடங்க ளாகவே ஆக்கிக் கொள்ளும் வித்தையில் கைதேர்ந்தவர்களாகிவிட்டதால், கோவில், திருவிழா, சடங்கு, சம்பிரதாயங்களை ஒரு வாய்ப் பாக்கி, மக்கள் பகுத்தறிவு, சமத்துவம், சுயமரியா தைக்குக் கேடு விளைவிக் கின்றனர்.

2026-ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில், இந்தப் பக்தி போதையை 'ஓட்டு வங்கி'யாக்கிக் கொள்ளவே ஆர்.எஸ்.எஸ்., சங் பரிவார் கூட்டம் முருகக் கடவுளைக் காப்பாற்ற மாநாடு போடுகிறார்களாம்!

சர்வ சக்தி வாய்ந்த கடவுளுக்கு இவர்களின் பாதுகாப்பு ஏன் தேவை? என்று சிறுபிள்ளைக்கூட - பகுத்தறிவுடன் கேள்வி கேட்குமே தமிழ்நாட்டில்!

**பா.ஜ.க.வினருக்கு முருகன் அரசியல் ஆயுதமா?**

ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. கூட்டத்தினர் தி.மு.க. ஆட்சியை ஒழித்திட, மற்ற வியூகங்கள் அனைத்தும் தோற்றுவிட்டதால், முழுக்க முழுக்க மதக் கலவரம் ஏற்படுத்திட, புதிய அரசியல் - 'பக்தி ஆயுதமாக' முருகக் காதல் பொத்துக் கொண்டு வந்துவிட்டது!

வட மாநிலங்களில் எல்லாம் 'ராம், ராம்' என்று ராமன் கோவிலைக் காட்டி உ.பி. போன்ற மாநில ஆட்சிகளை முன்பு கைப்பற்றினர்.

ஆனால், அதில்கூட 'God Show' பிரதமர் மோடி நடத்தியும், அயோத்தியிலேயே கூட பி.ஜே.பி. வெற்றி பெறாமல் எதிர்க்கட்சியினரே வெற்றி பெற்றனர்!

அதேபோல், மேற்குவங்கத்தில் காளி பூஜை ஒரு முக்கிய பண்டிகை. சில மாதங்களுக்கு முன்பு, அதிலும் தலையிட்டுப் பார்த்தனர். காளி பக்திக்கும், இராம பக்திக்கும்கூட எதிர்களங்கள் அமைத்து, அங்குள்ள பா.ஜ.க. அல்லாத திரிணாமுல் காங்கிரஸ் மம்தா ஆட்சியை அகற்ற, 'கஜகர்ணம்' போட்டு, மூக்குடை பட்டனர்!

தமிழ்நாட்டில் ஏற்கெனவே பா.ஜ.க. தமிழ்நாடு கட்சித் தலைவர் வேலோடு சுற்றிச் சுற்றி வந்தார்; முருகன் அருள்பாலிக்கவில்லை என்பது நாடறிந்த உண்மை!

**மீண்டும் 'திராவிட மாடல்' ஆட்சி!**

வேலைத் தூக்கியவர், முன்பு தாராபுரம் தொகுதியில் சட்டப்பேரவைத் தேர்தலில் தோற்றார். பிறகு நீலகிரி நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, ஆ.இராசாவை எதிர்த்து நின்றபோது, முடிவு என்னாயிற்று என்பது எல்லோரும் அறிந்ததே!

தமிழ்நாட்டு மக்கள், குறிப்பாக வாக்காளர்கள் தங்களது பக்தி உணர்வுக்காக ஒருபோதும் கொள்ளிக் கட்டையை எடுத்துத் தலையைச் சொறிந்து கொள்ளவே மாட்டார்கள்.

தமிழ்நாட்டில், இரண்டு, மூன்று முறை தோற்றும் இப்போதும் பாடம் கற்கவில்லை. சில அரசியல் அடமானங்களும், அரசியல் புரோ க்கர்கள் வீசும் வலையில் சிக்கும் பேர அரசியல்வாதி களும் புதிய தெம்பாகிவிட முடியாது. தமிழ்நாட்டில் மீண்டும் 'திராவிட மாடல்' ஆட்சி என்பது அசைக்க முடியாத கொள்கைக் கோட்டையாக உள்ளது.

ஊழலைப்பற்றி இங்கே வந்து 'சண்ட மாருதம் பேசும்' அமித்ஷாக்கள், அவர்கள் கட்சி ஆளும் உ.பி., ம.பி., ராஜஸ்தான் மற்றும் பல மாநிலங்கள் ஆட்சிகளின் லட்சணம் பற்றிய செய்திகளை மறந்துவிட்டா பேசுவது?

இராமனைக் காட்டி, வெற்றி தேட முனைந்த 1971 இல் தமிழ்நாட்டுத் தேர்தல் கதையும், முடிவுகளும்பற்றி அமித்ஷாக்கள் அறிந்திருக்க முடியாது.

அப்போது அவருக்கு அரசியல் களமே தெரிந்திருக்க வாய்ப்பில்லையே!

**ஆப்பசைத்த கதைதான்!**

எனவே, இவர்களின் அரசியல் 'சித்து' விளையாட்டுகள், பம்மாத்து பேரங்களுக்கு சில சபல புத்திக் கட்சிகளும், ஏல அரசியல்வாதிகளும் கிடைப்பார்களே தவிர, வெற்றிக் கனியைப் பெறலாம் என்று நினைத்து, தி.மு.க. கூட்டணியை அசைத்துக்கூடப் பார்க்க முடியாது. ஆப்பசைத்த கதைதான் - நாளைய வரலாறு சொல்லும் என்பது உறுதி.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கோவை அவினாசி சாலையில் நடைபெற்று வரும் உயர்மட்ட மேம்பாலப் பணிகளை நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கோவை மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு

# காக்களூரில் கண் சிகிச்சை முகாம் - திருநின்றவூரில் நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தூய்மை பணியாளருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

திருவள்ளூர், ஜூன், 11; திருவள்ளூர் மத்திய மாவட்ட திருவள்ளூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் காக்களூரில் இலவச கண்ணொளி திட்டத்தின் கீழ் கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. இதில் ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன் தலைமை தாங்கினார். பொதுக்குழு உறுப்பினர் த.எத்திராஜ் முன்னிலை வகித்தார். இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் சா.மு.நாசர், பூந்தமல்லி எம்எல்ஏ., ஆ.கிருஷ்ணசாமி சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு கண் சிகிச்சை முகாமை தொடங்கி வைத்தனர்.

சென்னை உமா கண் மருத்துவமனை சார்பில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமின் போது குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை கண் பரிசோதனை செய்து கொண்டனர். இதில் கிட்டப் பார்வை, தூரப்பார்வை உள்ளவர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டு பயனாளிகளுக்கு இலவச கண்ணாடியும் வழங்கப்பட்டது.

இதில் ஒன்றிய கழக நிர்வாகிகள் கே.கே.சொக்கலிங்கம், கே.தரணி, டி.கே. சீனிவாசன், டி.எம்.ராமச்சந்திரன், எஸ்.பரமேஸ்வரன், டி.டி.தயாளன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் எஸ்.சௌந்தரராஜன் , வி.தியாகராஜன், த.சுகுமார், ஸ்ரீதர், பிரபு, ஜெய்சங்கர், கே.சரவணன், கௌரி கஜேந்திரன், சிவாபிராகஷ், டி.சதீஷ், டி.வி. சரண்குமார், எஸ்.சக்திவேல், தியாகுசந்தர், க.ரோ. கார்த்திக், , ஓபி.ராஜன், முரளி, ஜே.திவாகர், தினேஷ், எம். கார்த்தி, ஜாகீர், பாஸ்கர், மகாதேவி, எஸ்.என்.கே. உஷா, ராஜி, உட்பட பலர் கலந்து கொண்டனர். இதில்100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கண் பரிசோதனை செய்து கொண்டனர்

. இந் நிகழ்ச்சி முன்னதாக திருநின்றவூர் நகர இலக்கிய அஓ திமுக சார்பில் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 6 வது வார்டு லட்சுமி தியேட்டர் அருகில் நகரச் செயலாளர் தி.வை. இரவி தலைமையில் நகர இலக்கிய அணி அமைப்பாளர் பி.எல்.ஆர்.யோகா ஏற்பாட்டில் கழக கொடி ஏற்றுதல் 1600 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க நிகழ்ச்சி நடைபெற்றது இதில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கழக கொடி யேற்றி பொதுமக்கள் தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் அறுசுவை உணவு வழங்கினார் இதில் ஆவடி மேயர் ஜி.உதயகுமார், ஆவடி வடக்கு பகுதி செயலாளர் ஜி.ராஜேந்திரன் , நகர மன்ற உறுப்பினர் தேவி யோகா, வார்டு செயலாளர்கள் சலீல், அசோகுமார், பாஸ்கர், நிர்வாகிகள் ஆறுமுக ராஜா, கோகுல், உள்பட பலர் உள்ளனர்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் 102 ஆவது பிறந்தநாள் விழா!

# நல்லூர் வடக்கு ஒன்றியத்தில் தெருமுனை பிரச்சாரப் பொதுக் கூட்டம்!

## தலைமைக் கழக பேச்சாளர் ஆரணி மாலா சிறப்புரை!

கடலூர், ஜூன் 11- முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 ஆவது பிறந்தநாள் முன்னிட்டு நல்லூர் வடக்கு ஒன்றியத்தில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் நான் காண்டு கால சாதனைகளை விளக்கும் வகையில் துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் அவர்களின் ஆலோசனைப்படி நல்லூர் வடக்கு ஒன்றியம் வேப்பூர், சேப்பாக்கம், நல்லூர் ஆகிய ஊர்களில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் 09.06.2025 திங்கள்கிழமை அன்று மாலை 6 மணி அளவில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் நல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பாவாடை கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் ஆரணி மாலா கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

இக்கூட்டத்தில் ஒன்றிய துணை செயலாளர்கள் பூலாம்பாடி டி. அண்ணாதுரை நாரையூர் மாரிமுத்தாள் குணசேகரன் நல்லூர் அன்பு குமரன் ஒன்றிய பொருளாளர் சேப்பாக்கம் ஜி.வெங்கடாசலம் முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாரையூர் துரை.கருப்புசாமி முன்னாள் மாவட்ட கவுன்சிலர் நகர். சக்திவிநாயகம் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் கொத்தனூர். கே ரகுநாதன்



திருவள்ளூர் மாவட்ட மாற்று திறனாளிகள் நலத்துறை சார்பில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் வி.ஜி.இராஜேந்திரன் மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கரம் பொருத்திய மோட்டார் வாகனத்தை வழங்கினார்.நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் சீனிவாசன், துறை சார்ந்த அலுவலர் ப்ரீத்தா, மாவட்ட கழக அவைத் தலைவர் க.திராவிடபக்தன், ஒன்றிய செயலாளர்கள் கூளூர் எம். ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், மோ.ரமேஷ், கே.அரிகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் ப.சிட்டிபாபு, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி.எஸ்.நேதாஜி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தா.மோதிலால், நகராட்சி முன்னாள் தலைவர் பொன்.பாண்டியன், பட்டரை கே.பாஸ்கரன்,ஆ. கமலக்கண்ணன், கொப்பூர் டிதிலீப்குமார், கு.செங்குட்டுவன், இளைஞரணி அமைப்பாளர் ஆர். மோகனசுந்தரம், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஆர்.வாசு, வா.சங்கர், இரா.தனசேகர், எழிலரசன், பூபாலன், கௌதம், பகவதிராஜா, ப.முரளி, ராஜாசிங், டி.என்.பன்னீர்செல்வம், கலையரசன் உள்ளிட்ட கழகத்தினர் மற்றும் பயனாளிகள் அவர்களது உதவியாளர்கள் பங்கேற்றனர்.



ஷிஃபா அல் ஜெசிரா மருத்துவமனையின் மருத்துவர் கமலக்கண்ணன் மற்றும் மருத்துவர் டாடா அவர்களுக்கு தலைவர் முகமது ஹுசைன் மாலிம், செயல் தலைவர் கருணாநிதி சண்முகம், பொதுச் செயலாளர் முகமது இஸ்மாயில் ஆகியோர் நினைவுப் பரிசு வழங்கினார்கள். துணைப் பொறுப்பாளர்கள் சுல்தான் இப்ராஹிம். சதீஷ் குமார். லலித்குமார். கபீர் அகமது. NRTIA, நிர்வாகிகள். அசோக்குமார். ஆசாத் மைதீன் பிரபாகரன். சங்கீதா பாபு. குடந்தை ஆரிப் ஆழியூர் சாகுல். பவுல் டேவிட். மிர்ஷா அல்லாப் பிச்சை. மன்னை செல்வம். ஆரூர் சாகுல். சேகர் ராஜலிங்கம். சராபுதீன். முபாரக் அலி. மொய்தீன். சலீம். முகமது ஹக்கீம். மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### அமித்ஷாவின் பேச்சு அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல!

# தமிழ்நாட்டில் பா.ஜ.க.வின் மதவாத அரசியல் எடுபட்டதில்லை!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஜூன் 11 - மதுரையில் உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் பேச்சு அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல எனவும், தமிழ்நாட்டில் பா.ஜ.க. வின் மதவாத அரசியல் - பிளவுவாத அரசியல் எடுபட்டதில்லை என்பது தான் கடந்த கால வரலாறாக உள்ளது எனவும் 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அது வருமாறு:



தினகரன்

ஜூன் 10, 2025 செவ்வாய்க்கிழமை

பதவிக்கு அழகல்ல

தமிழ்நாட்டில் திமுக தலைமையிலான அரசு சிறப்பாக செயல்படுவது ஒன்றிய அரசின் கண்ணை உறுத்துவதாக தெரிகிறது. அதனால் தான் மதுரையில் உள்துறை அமைச்சர் பேச்சு பல்வேறு யூகங்களை ஏற்படுத்தி உள்ளது. மணிப்பூரில் இரண்டு ஆண்டுகளையும் தாண்டி பற்றி எரியும் பிரச்னையை ஒன்றிய அரசு தீர்த்தபாடில்லை. ஆனால் தமிழ்நாட்டில் ஆட்சியை பிடிக்க பல்வேறு யுக்திகளை கையாளுகிறது.

மணிப்பூர் மாநிலத்தில் கடந்த 2023ம் ஆண்டு மே 3ம் தேதி இரு சமூக மக்களுக்கிடையே கலவ

தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான அரசு சிறப்பாக செயல்படுவது ஒன்றிய அரசின் கண்ணை உறுத்துவதாக தெரிகிறது. அதனால் தான் மதுரையில் உள்துறை அமைச்சர் பேச்சு பல்வேறு யூகங்களை ஏற்படுத்தி உள்ளது. மணிப்பூரில் இரண்டு ஆண்டுகளையும் தாண்டி பற்றி எரியும் பிரச்சினையை ஒன்றிய அரசு தீர்த்தபாடில்லை. ஆனால் தமிழ்நாட்டில் ஆட்சியை பிடிக்க பல்வேறு யுக்தி களை கையாளுகிறது. மணிப்பூர் மாநிலத்தில் கடந்த 2023ம் ஆண்டு மே 3ம் தேதி இரு சமூக மக்களுக்கிடையே கலவரம் தொடங்கியது. இரண்டு ஆண்டுகளையும் தாண்டி நடக்கும் பிரச்சினை முடிந்தபாடில்லை.

பெரும்பான்மை மெய்டீ இனத்தினருக்கும் சிறுபான்மை குக்கி பழங்குடி சமூகத்தினருக்கும் இடையே நடந்த மோதல் நாட்டையே உலுக்கியது. மக்களவையில் கடும் விவாதம் நடந்தும் பிரதமர் மோடி அங்கு செல்லாதது புகைந்து கொண்டேதான் உள்ளது. கடந்த பிப்ரவரி யில் பா.ஜ. ஆட்சி கலைக்கப்பட்டு தற்போது ஜனாதிபதி ஆட்சி அங்கு நடந்து வருகிறது. இந்நிலையில் மணிப்பூரில் மெய்டீ இன அமைப்பான அரம்பாய் தெங்கோல் தலைவர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக செய்தி பரவியதைத் தொடர்ந்து அங்கு பல்வேறு பகுதிகளில் போராட்டம் வெடித்தது.

தலைநகர் இம்பால் வரை கடந்த இரண்டு நாட்களாக சாலை மறியல், பிரதான சாலைகளில் டயர்களை வைத்து தீயிட்டுக் கொளுத்துவது, பாதுகாப்பில் இருக்கும் காவல் வாகனங்கள் மீதும் தாக்குதல் நடைபெறுவதால் பதற்றம் நிலவி வருகிறது. இப்பிரச்னையை தீர்க்க ஒன்றிய அரசு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது போன்று மகாராஷ்டிரா தேர்தல் 2024 எப்படி திருடப்பட்டது என்பதனை ஆதாரத்தோடு ராகுல் காந்தி விளக்கியி ருக்கிறார். 2019 மே தேர்தலில் 8.98 கோடி வாக்காளர்கள், 2024 மே தேர்தல் - 9.29 கோடி வாக்காளர்கள், 2024 நவ. தேர்தலில் 9.70 கோடி வாக்காளர்களாக உயர்ந்து உள்ளனர்.

5 வருடங்களில் 31லட்சம் வாக்காளர்கள் அதிகரித்துள்ளனர். ஆனால் 2024 நாடாளுமன்ற தேர்தலுக்கு பின்னர், 2024 சட்டசபை தேர்தல் நவம்பர் மாதம் நடந்தது. இந்த 5 மாதத்துக்குள், 41 லட்சம் வாக்காளர்கள் அதிகரித்துள்ளனர். இது எப்படி என்பது குறித்து தேர்தல் ஆணையம் விளக்கவேயில்லை. ஒவ்வொரு மாநிலத்திலும் ஏதாவது தில்லுமுல்லு நடத்தி ஆட்சியை கைப்பற்றுவதும், தக்கவைப்பதுமாக ஒன்றிய அரசு செயல்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டுகின்றன. இந்நிலையில் மதுரையில் உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசியிருப்பது பல்வேறு சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

வரும் ஜூன் 22ம் தேதி நடைபெறவுள்ள முருக பக்தர்கள் மாநாட்டை சிறப்பாக நடத்தி தர வேண்டும். எனது கண்ணும், காதும் தமிழ்நாட்டிலேயே இருக்கின்றன. 2024ல் ஒடிசா, அரியானா, மகாராஷ்டிரா மற்றும் டெல்லியில் பா.ஜ. ஆட்சி அமைந்தது. முருக பக்தர்கள் மாநாட்டில், நீங்கள் ஒவ்வொருவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு நம்முடைய வலிமையையும், ஒற்றுமையையும் காட்ட வேண்டும் என பேசி உள்ளார். ஒன்றிய அரசு அதிக திட்டங்களை யும், நிதியையும் கொடுத்ததாக கூறும் அவர், அதனை விளக்க வில்லை.

மொத்தத்தில் அவரது பேச்சு அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல. அமைதியாக வாழும் தமிழ்நாட்டில் மத ரீதியாக பிளவுபடுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்மூலம் பெரிய அசம்பாவிதம் ஏற்படுத்த வேண்டும். இதனால் ஆட்சிக்கு கெட்ட பெயர் வர வேண்டும். இதன்மூலம் வரும் சட்டமன்றத் தேர்தலில் ஆட்சியை மாற்ற வேண்டும் என பா.ஜ. நினைப்பதாக ஆளுங் கூட்டணி தலைவர்கள் கருதுகின்றனர். தமிழ்நாட்டில் மதவாத அரசியல், பிளவுவாத அரசியல் எடுபட்டதில்லை என்பது தான் கடந்த கால வரலாறாக உள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் அவசர ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கலந்து கொண்டு ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பின் கீழ் கழகத்திற்கு உறுப்பினர்கள் சேர்க்கை குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் எல்லாபுரம் பி.ஜெ.மூர்த்தி, மு.பகலவன், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், கே.சுரேஷ், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி எம்.எல்.ரவி, மு.கதிரவன், ஏ.வி.ராமமூர்த்தி, பா. செ.குணசேகரன், பி.வெங்கடாஜலபதி, கே.எஸ்.மணி, டாக்டர்.கே.பரிமளம், கி.வே.ஆனந்தகுமார் மு. மணிபாலன், டி.கே.சந்திரசேகர் ஆ.சத்தியவேலு, ந.பரிமளம், ஜான் பொன்னுசாமி, அபிராமி குமரவேல், இரா.அறிவழகன், நா.செல்வசேகரன், மு.முரளிதரன் கா.சு.ஜெகதீசன், ஆ.ராஜா ஏ.ஆர்.டி.உதயசூரியன், வே.ஆனந்தகுமார், ஜி.ரவிக்குமார், பி.முத்து கா.சு.தமிழ்உதயன், உள்பட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய திமு.க சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுகூட்டம் மொண்டியம்மன் நகரில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திராவிடர் கழக துணைப் பொதுச்செயலாளர் வழக்கறிஞர் சே.ம.மதிவதனி சிறப்புரையயாற்றினார். நிறைவாக நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. ஒன்றிய நிர்வாகிகள் ஏ.காசீம் முகம்மது, கே.எம். துரைவேல், ப.சீனிவாசன், இராடவிஜயன், செ.அரசு, மடசேகர், பொலன் கோதண்டன், மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் சன் முனியாண்டி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் நடபரசுராமன், டி.சம்பத்குமார், ஏசப்பார்த்திபன், சன்.எம்.முகமதுபிக் ஆகியோர் நன்றிஉரையாற்றினர். சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.